குளத்தூர் தொகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1982—83-ல் கிணறு வெட்ட வழங்கப்பட்ட கடன் தொகை.

329.—(*வினா எண். 20023)—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் உள்ள விராலிமலை, அன்னவாசல், கீரனூர் நிலவள வங்கிகள் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை பேர்களுக்கு கிணறு வெட்ட 1982–83ல் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) மானியமாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) விராலிமலை நிலவளவங்கி இருவருக்கும், அன்னவாசல் நிலவள வங்கி நால்வருக்குமாக, மொத்தம் ரூ. 0.18 இலட்சத்திற்குக் கடன் வழங்கியுள்ளன.

(ஆ) சிறுபாசனம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டக் கடன்களின் கீழ் ரூ. 0.12 இலட்சம் மானியமாக வழங் கப்பட்டது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்பட்டு வந்த கடன்கள் என்ன காரணத்திற்காக நிலவள வங்கிகளுக்கு மாற்றப்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா? குறைந்த நிலத்தை மட்டும் வைத்திருக்கிற ஆதி திராவிட மக்கள் நிலவள வங்கிகள் மூலம் கடன் பெறுவதில் நடைமுறையில் அதிகமாக சிரமம் இருக்கிறது. ஆகவே மீண்டும் ஆதி திராவிட நலத்துறை யின் மூலம் கடன் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, நிலவள வங்கி மூலமாகத்தான் இப்போது வழங்கப் பட்டு வருகிறது. என்னிடத்திலுள்ள அந்தப் பொறுப்பை இப்போது நான் மாற்றத் தயாராயில்லை.

திரு. த. மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத்துறை மூலமாகத்தான் ஏற்கெனவே கடன் வழங்கிக் கொண் டிருந்தார்கள். இப்போது அதை மாற்றினால் பல சிரமங்கள் இருப்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு நிலவள வங்கியில் பலவித முறைகேடு கள் நடந்து மாவட்ட அதிகாரிகளால் அவை கண்டுப்பிடிக்கப் பட்டு மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, மாநில நிலவள வங்கிக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு பல மாதங்களாகியும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று பொது

1984 மார்ச் 15]

மக்கள் கொடுத்துள்ள புகார்கள் பேரிலும் அமைச்சர் அவர்களிடம் கொடுத்துள்ள புகார்களின் பேரிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முறையாக தீவிரமாக எடுக்காததால் தவறு செய்பவர்கள், மேலும் தவறுகள் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே மாநில நிலவள வங்கி உயர் அதிகாரிகள் முறையான நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நில வள வங்கி மூலம் ஆதி திராவிட மக்களுக்கு கடன்கள் வழங்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி அவர்கள் பகுதியில் அல்லது அவர்கள் தாலுகாவில் நிலவள வங்கியில் ஏதாவது பிரச்னை இருக்குமானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கைகள் எடுக்கத் தயார். மொத்தத்தில், நில வள வங்கிகள் ஆதி திராவிட பெருமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் கடன்கள் வழங்க அரசாங்கம் அதற்கு வேண்டிய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ், அறிவிப்புகள் நிலவள வங்கிகளுக்கு அனுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 330-க்கான பதில் வரவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வினா தள்ளிவைக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது என்றால் அது வேறு விஷயம். ஆனால் கேள்விக்கு பதில் வரவில்லை என்பது It cannot be a ground. கேள்விக்குப் பதில் வரவில்லை என்றால் அதற்கு அமைச்சர்தான் பொறுப்பு. Once it is included in the list, the Hon. Minister is bound to answer.

உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்தும் திட்டம்.

330—(* வினா எண். 21734)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகட்கு உதவி செய்யும் நோக்கத்தோடு 'உழவர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' (Farmers Economic Development Corporation) அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) : அரசாங்கத்தினுடைய ஆய்வில் இருக்கிறது.